09.10.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 7 /2022 ) திருமதி.தாமரைச்செல்வி.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) நான் பிறந்த வருடம் 1990 என்றால் இல்லை 05.10.1989 பிறந்த தேதி ஆகும். எனது தகப்பனாரின் பெயர் காளிமுத்து என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு சொந்த ஊர் எது என்றால் சாகூர் ஆகும். அது எந்த வட்டத்தில் உள்ளது என்றால் சங்கரன்கோவில் பக்கத்தில் உள்ளது. காளிமுத்துவின் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 4 பேர்கள்.அவர்கள் 4 பேர்களும் சாகூரில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் அவர்கள் எங்கு வசித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்றால் என்னுடைய 15 வயதில் இறந்தார் அதாவது 2003 ஆம் ஆண்டு இருக்குமா என்றால் இருக்கும். அதுவரை நான் சாகூரில் தான் வசித்து வந்தேன் என்றால் இல்லை என் அப்பாவிற்கு சொத்து எதுவும் இல்லை என்பதால் அம்மாவுடன் வீட்டுன் மாப்பிள்ளையாக இருந்து வந்தார்கள். அலமேலு என்பது எனது பாட்டி என்றால் அலமேலு என்பவர் எனக்கு யார் என்றே தெரியாது. வழக்கின் வாதி மாயாவின் அம்மா பெயர் என்னவென்றால் ஆவுடையம்மாள். ஆவுடையம்மாளின் அப்பா பெயர் என்னவென்றால் தெரியாது. ஆவுடையம்மாள் உடன் பிறந்தவர்கள் யாருடைய பெயரும் எனக்குதெரியாது என்றால் அவர் ஒரு பெண் தான். அவர் எங்கு வசித்து வந்தார் என்றால் எனக்குதெரியாது. எனது தந்தை ரெங்கையாபுரத்தில் வசித்து வந்தரா என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்லும் ரெங்கையாபுரத்தை தான் சாகூர் என்று சொல்லுவார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவுக்கும், அம்மாவுக்கும் எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றதுஎன்றுதெரியுமா என்றால் தெரியாது. தளவாய்புரத்தில் வசித்துவந்தார்கள் யாரையாவது தெரியுமா என்றால் தளவாய்புரம் தெரியும் அங்கு எனது தந்தை உடன்பிறந்தவர்கள் வாரிசுகள் வசித்து வருகிறார்கள். எனதுதந்தை மூத்த மனைவியின் மகள் அங்கு வசித்து வருகிறார். எனது தந்தைக்கு எனது தாயார் 2 ம்தாரம் என்றால் சரிதான்.

2) எனது அப்பாவின் மூத்த தாரம் தற்போது இருந்து வருகிறா என்றால் அவர் இறந்துவிட்டார். அவர் எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது.அவர் இறந்த பின்னர் தான் எனது அம்மாவை 2 வது தாராமாக கட்டியுள்ளார். தளவாய்புரத்தில தான எனது பாட்டியை திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொது அதிகார

ஆவணம் யாரால் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் எனது கணவர் தான் தயார் செய்தார். எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்று எனக்கு நேரிடையாகத்தெரியாது என்றால் நான் உடன்தான் இருந்தேன். உடன் இருந்ததால் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் மூலமாக தயார் செய்யப்பட்டது. பொது அதிகார ஆவணத்தில் எங்குவைத்து, எந்த தேதியில், யாரால் தயார் செய்யப்பட்டது என்ற வாசகங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்கு வைத்து யாரால் கையொப்பம் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் கழுகுமலையில் வைத்து கையொப்பம் செய்யப்பட்டது. கையொப்பம்செய்யப்பட்ட பின்பு பொது அதிகார ஆவணத்தில் கையொப்பம் இடப்பட்டப்பட்டுள்ள நோட்டரிபப்ளிக் அலுவலகத்திற்கு எடுத்து செல்லப்பட்டு நோட்டரிபப்ளிக் கையொப்பம் பெறப்பட்டது. கழுகுமலையில் யாருடைய அலுவலகத்தில் எங்கு வைத்து கையொப்பம் செய்யப்பட்டது என்றால் கழுகுமலையில் உள்ள வழக்கறிஞர் பெயர் ஞாபகமில்லை அவர் வீட்டில வைத்து கையொப்பம் செய்யப்பட்டது. பொது அதிகார ஆவணத்தில் கையொப்பம் செய்யப்பட்டுள்ள நோட்டிரிக் பப்ளிக் வழக்கறிஞர் கழுகுமலையில் இல்லை என்றால் சரிதான்.

3) பொது அதிகார ஆவணத்தில் மேலே கண்ட சங்கதிகள் உண்மை என்று உறுதியிட்டு கூறுகின்ற வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். உண்மையில் பிராதுடன் தாக்கல்செய்யப்பட்டுள்ள பொது அதிகார ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் மூலம் இந்த வழக்கை வாதிக்காக தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பொது அதிகார ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது புகார் மனுக்கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகார் யாரால் எங்கு கொடுக்கப்பட்டது என்றால் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. மேற்படி புகார் தவிர கயத்தார் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. புகார் மனு குறித்து கயத்தார் காவல்நிலையத்தில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த புகார் எங்கு அனுப்பப்பட்டது என்றால் கழுகுமலை காவல்நிலையத்தில் விசாரிக்கப்பட்டது. எவ்வளவு நாள் விசாரிக்கப்பட்டது என்றால் 2 நாட்கள் விசாரிக்கப்பட்டது. நான் காவல் நிலையத்திற்கு வெளியே இருந்தேன் என்றால்

சரிதான். அந்த விசாரணையின் போது யார் யார் சென்றியிருந்தோம் என்றால் நான், எனது கணவர், எனதுஅம்மா ஆகியோர்கள் சென்றியிருந்தோம். எனது தாயாரை மட்டும் தான் விசாரித்தார்கள் என்றால் ஆமாம். என்னையும், எனது கணவரையும் விசாரிக்கவில்லை என்றால் எனது கணவரையும் விசாரித்தார்கள்.

4) எனது கணவர் என்னவேலை செய்கிறார் என்றால் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். வெளிநாட்டில் என்ன வேலை செய்கிறார் என்றால் தபால் பட்டுவாடா செய்யும் கொரியர் அலுவலகத்தில் வேலைசெய்கிறார். இன்றைய தினம் எனது கணவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். அவர் எவ்வளவு நாள் வெளிநாட்டில் இருப்பார் எப்போது உள்நாட்டிற்கு வருவார் என்றால் ஒரு வருடத்திற்கு ஒருமுறையும் வருவார், 2 வருடத்திற்கு ஒருமுறையும் வருவார் எப்போது தேவை ஏற்படுகிறதோ அப்போதும் வருவார். காவல்நிலைய விசாரணையின் போது என் அம்மாவிடமிருந்த ஆவணங்களை சமர்ப்பித்தார் என்றால் சரிதான். அந்த விசாரணையின் போது இந்த வழக்கின் பிரதிவாதியையும் காவல்நிலைய விசாரணைக்கு அழைத்தார்கள் என்றால் சரிதான். அவரிடமிருந்த ஆவணங்களை சமர்ப்பித்தார் என்றால் சரிதான். சமர்ப்பித்த பின்பு அவர்கள் இதில் மேல்நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள் என்றால் காவல் நிலையத்தில் 2 ம்பிரதிவாதிக்கும், இதற்கும் சம்பந்தமில்லை என்று சொல்லிவிட்டார்கள் இடம் வழக்கின் வாதி மாயாவிற்கு சொந்தமானது என்று சொல்லிவிட்டார்கள். அதில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். அந்த வழக்கு தொடர்ந்து தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் மீண்டும் சாட்சி பிரதிவாதிகளுக்கு எதிராக குற்ற வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று கூறுகிறார். பின்னர் அந்த புகார் மனு மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று எங்களுக்கு துணையாக வந்திருந்த வழக்கறிஞரிடமும் கேட்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.12 புகார் கொடுக்கப்பட்ட காலம் என்னவென்றால் 2021 சுமார் 4 ஆண்டுகளாக அந்த புகார் மனு என்ன ஆனது என்றும் அந்த மனு மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றும் தொடர்ந்து நான் கண்காணித்தேனா என்றால் இல்லை நான் தான் வழக்கு போட்டேன். காவல்துறையினர் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள என்னை அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். உடன்இருந்த வழக்கறிஞர் புகார் மனு

சம்பந்தமாக குற்ற நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறை கூறினாரா என்றால் இல்லை. புகார் கொடுத்தது அனைத்தும் எனது கணவர் மூலமாகத்தான் செய்தோம். புகார் மனு எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் கழுகுமலையில் வைத்து தயார் செய்யப்பட்டது.

5) வா.சா.ஆ.12 புகார் மனுவில் பக்கம் எண்.2 ல் இதனால் அதிர்ச்சி அடைந்த நாங்கள் கண்ணீரோடு பூர்வீக இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டோம் என்று வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான் நாங்கள் இடத்திற்கு சென்று அடுத்து பயிர் செய்வதற்காக சுத்தம் செய்து கொண்டியிருந்த போது காரில் வந்த நபர்கள் எங்கள் இடத்திலிருந்து வெளியேறுங்கள் என்று கூறியதால் எனது கணவருக்கு போன் செய்து கேட்டேன் அவர் நீங்கள் பெண்கள் வெளியேறி விடுங்கள் என்று சொன்னால் நாங்கள் வெளியேறி விட்டோம். எங்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றியது பிரதிவாதிகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணம் 2014 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ல் இருக்கின்ற திரு.செல்லையா இறந்தது 1983 அந்த இறப்பை 2014 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு சுப்பையா என்று யாரையும் தெரியாது என்றால் சரிதான். எனக்கு அய்யப்பன் என்பவரையும் யார் என்று தெரியாது என்றால் சரிதான். எனது முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தில் ஆதியில் வாதியின் பாட்டனாரான கிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் நேரிடையாக தெரியுமா என்றால் எனது அம்மா சொல்லி தான்தெரியும். அதற்கு பின்பு கிருஷ்ணன் வாரிசுகளான செல்லையா,கருப்பண்ணன்,வெள்ளையப்பன் ஆகியோர்கள் வாரிசுகளாக இருந்தார்கள் என்பது எனது அம்மா சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணை 3 வது பத்தியில் கண்ட சங்கதிகள் எனது அம்மா சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் எத்தனை புல எண்களில் உள்ளது என்றால் 2 புல எண்களில் உள்ளது. மொத்தம் 3 சொத்துக்கள் என்றால் சரிதான். இதனுடைய பூர்வீக ஆவணங்கள் நான் பார்வையிட்டேன் என்றால் சரிதான்.

6) என்ன என்ன ஆவணங்களை பார்வையிட்டேன் என்றால் யூ.டி.ஆர்.பட்டா. ரசீதுஎனது தாத்தா பெயரில் உள்ளது எனது அம்மா பெயரில் இருந்ததை பார்த்தேன். 1980,1970,1960 ஆகிய ஆண்டுகளில் உள்ள வருவாய்துறை 'அ' பதிவேடு ஆவணங்களை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அதன் நகலை

பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மீண்டும் சாட்சி அ பதிவேட்டு நகலை பெறவில்லை என்று கூறுகிறார். எனக்கு சாதகமான இருந்ததாக கூறுகின்ற அ பதிவேட்டு நகலை ஏன் பெறவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை முக்கியமா என்று தோணவில்லை. உண்மையில் நான் சொல்லும் பாட்டனாருக்குரியது இல்லை என்பதாலும அது எனக்குசாதகமாக இல்லை என்பதாலும் நகல் பெறவில்லை என்றால் சரியல்ல. 1980-க்கு முன்புள்ள நில வரைபடம், செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர், வரிரசீதுகள் போன்ற பழைய ஆவணங்கள் வருவாய் துறையில பார்வையிட முயற்சி செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் தாவாச்சொத்தின் சர்வே எண்.133/2 எந்த காலத்தில் 133/2 ஏ மற்றும் 133/2 பி-யாக எந்த காலத்தில் உட்பிரிவு செய்யப்பட்டது என்பதை அறிய முற்படவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்தான 134/5 எந்தக்காலத்தில 134/5 ஏ,134/5 பி எந்த காலத்தில் உட்பிரிவு செய்யப்பட்டது என்பதை அறிய முற்படவில்லை என்றால் சரிதான். இந்த பிரதிவாதிகள் 14.03.2012 தேதியிட்ட ஆவண எண்.01/955/2012 ஆவணத்தின் மூலம் தான் தங்களுடைய பெயருக்கு பட்டா மாற்றுதல் அறிக்கை பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். பட்டா மாறுதல் அறிக்கை தெரிந்ததிலிருந்து இதுவரை தவறு என்று மேல்முறையீடோ, மனுவோ கொடுக்கவில்லை என்றால் அந்த விவரம் பிரச்சனை வந்த பிறகு 2021 ல் தான் தெரியவந்தது. 2021 க்கு பின்னர் பட்டா மாறுதலுக்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் காவல்நிலையம் சென்று வழக்குதாக்கல் செய்துள்ளேன். தாவாச்சொத்தின் பட்டா சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரிடமோ, வட்டாட்சியரிடமோ,கோட்டாட்சியரிடமோ மனுக்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

7) நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் பத்தி எண்.4 ல் நான் சத்தம் போட்டதில் பிரதிவாதிகள் கிளம்பி சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர்கள் எங்களை தாவாச்சொத்திலிருந்து வெளியேற்றி விட்டார்கள் என்ற விவரததை சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் பிரதிவாதிகள் வெளியேறி விட்டார்கள் என்றுசொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் உள்ள தீர்வை ரசீதுகள் அனைத்திலும் கி.செல்லையா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் கலம் எண்.1 ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் மாயா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு நன்றாக

எழுதப்படிக்கத்தெரியுமா என்றால் தெரியும். அதில் வரி செலுத்துபவர் 2 பக்கம் மாயா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மாயா என்பது ஒரு பேனா மையினாலும் வரிசெலுத்துவர் என்ற இடத்தில் வேறு ஒரு பேனா மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் ஒரே மையாகத்தான் தோன்றுகிறது. வா.சா.ஆ.13 ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அதை புதியதாக பதிவு செய்ய எங்கள் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவிலலை என்றால் சரிதான். 1983 ஆம் ஆண்டு இறந்து போன செல்லையா என்பவருக்கு இதுவரை நாங்கள் தான் வாரிசுகள் என்ற வாரிசு சான்றோ நாங்கள் தான் வாரிசு வழியில் உரிமைதாரர்கள் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் உண்மையில் இறந்து போன கிருஷ்ணன் மகன் செல்லையா என்பவருக்கு வாரிசு இல்லை என்பதால் தான் வாரிசு சான்று எடுக்கவில்லை அதனை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எடுத்துள்ளோம், தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் வாதி எனது தாயார் தாவாச்சொத்துக்களில் உரிமையுடையவராக இருந்தார் என்பதற்கு இதுவரை எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) வழக்கின் வாதியாகிய எனது தாயார் செல்லையாவின் மகள் என்பதை காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரதிவாதிகளின் தகப்பனார் வெள்ளச்சாமியை தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் கேரளா மாநிலத்தில் எஸ்டேட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் தாமரைச்செல்வி என்று போடப்பட்டுள்ளது எனது பெயர் என்றால் சரிதான். அதில் கணவர் என்ற இடத்தில் கனகராஜ் என்று போடப்பட்டுள்ளது என்றால்ச ரிதான். வா.சா.ஆ.6 எந்த அலுவலகத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் வி.ஏ.ஓ.விடம் கையொப்பம் பெற்று ஈ.சேவை மைய்யத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.6 பெறுவதற்கு எந்த ஒரு வருவாய் ஆவணம் இல்லாமல் பெற்றுள்ளேன் என்றால் தவறு யூ.டி.ஆர்.பட்டாவை வைத்து பெற்றுள்ளேன். நான் சொல்லும் யூ.டி.ஆர்.பட்டாவில் கிருஷ்ணன் மகன் செல்லையா என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த யூ.டி.ஆர்.பட்டாவில் எனது பெயர் இல்லை என்றால் சரிதான். எனது பெயர் இல்லாமல் நான் ஈ.சேவை மய்யத்தின் உதவியுடன் போலியான ஆவணம் உற்பத்தி செய்ய முயற்சித்துள்ளேன் என்றால்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் போலியனவை என்றும் அது வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
09.10.2025.